**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தென்காசி**
**முன்னிலை: திரு.K.N.குரு, பி.ஏ.,பி.எல்.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, தென்காசி**
2025–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09–ஆம் நாள் புதன்கிழமை
**அசல் வழக்கு எண். 208/2024**
**(அம்பாசமுத்திரம் அ.வ.எண்.204/2022)**
(CNR No.TNTS060005762024)

1. சவரியம்மாள்
2. ஜெசிந்தா
3. சுசன்னா
4. ஜாஸ்மின் சபீனா ... வாதிகள்

/எதிர்/

1. பதுவைலில்லி
2. சேவியர்
3. சேசுராஜன்
4. ஜெயசீலன்
5. மஞ்சுளா ..... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்னர் இன்று (09.07.2025) விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ரமேஷ் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.D.சொக்கலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 5ம் பிரதிவாதிக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் 5ம் பிரதிவாதியை பொறுத்து ஒருதரப்பாக்கப்பட்டும், வாதிகள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றவாணங்கள் தாக்கல் செய்வதற்காக வழக்கு நிலுவையில் இருந்த நிலையிலும், வாதிகள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றவாணங்கள் தாக்கல் செய்யாத காரணத்தினாலும், வாதிகள் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாத காரணத்தாலும், வாதிகளின் வருகை தவறுகைக்காகவும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

பிராது தபசில் சொத்து வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பொதுநடைபாதை என்று விளம்புகை செய்வதன் மூலம் பிரதிவாதிகள் மாதிரி வரைபடத்தில் கண்ட EFCG பகுதியில் கிழமேலாக 10

அடி அகலத்திலும் தென்வடலாக 30 அடி நீளத்திலும் 10 அடி உயரத்திலும் கட்டிய கட்டுமானத்தை இடித்து அப்புறப்படுத்திப் போக ஒரு செயலுறுத்துக் கட்டளை உத்தரவு பிறப்பிக்கும்படிக்கும், அவ்வாறு பிரதிவாதிகள் மறுக்கும்பட்சத்தில் சமூகம் கோர்ட்டார் அவர்களே அதனை அப்புறப்படுத்தி அதற்கான செலவை பிரதிவாதிகள் செலுத்த உத்தரவிடும்படிக்கும், இவ்வழக்கின் செலவுத்தொகை வாதிகளுக்கு, பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கக் கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

No representation. List not filed. Suit dismissed for non prosecution

2025–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 09-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஓம்/–K.N.குரு**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**தென்காசி.**